அவர்கள் வளம்பெற முடியாது. கடனுக்கான வட்டியே குட்டி போட்டு, அது அசலைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு பெருகிவிடுவதால், வட்டியை நீக்கிவிட்டு அசலை மட்டும் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் கடற்கரை,

*வினா எண். 223— திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் பகுதியில் எண்ணூர் வரையுள்ள கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் இத்திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) (ஆ) இல்லை.

திரு. பொ. சிகாமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இத்திட்டம் இல்லை என்று சொன்னார்கள். இத்திட்டத்தை மேற்கொண்டால் மெரீனா கடற்கரை போல் வடசென்னை கடற்கரையும் அழகுபெற்று மக்கள் பயனடைய முடியும். இத்திட்டத்திற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் உதவி செய்ய தயாராக இருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு அரசு மேற்கொண்டு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள கடற்கரையில் தொழிற்சாலைகளிலுள்ள கழிவுநீர் மற்றும் அசுத்தநீர் எல்லாம் வந்து கலக்கின்ற காரணத்தால் அதை ஒரு அழகுமிக்க கடற்கரையாக ஆக்குகின்ற வாய்ப்பு இல்லை என்ற கருத்து தற்போது இருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, திருவொற்றியூரிலிருந்து எண்ணூர் வரையில் கடற்கரையே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு வெகுவிரைவிலே நிலைமை ஏற்பட இருக்கிறது. அதற்குக் காரணம் ஆண்டுக்காண்டு கடலரிப்பு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் சென்னை துறைமுகத்திலிருந்து எடுக்கப்படுகிற மணல், சேறு போன்றவை அந்தப்பகுதியில் கொட்

டப்படுகிற காரணத்தால் கடல் அரிப்பு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகையால், மக்களை பாதுகாக்கவும், கடற்கரையைப் பாதுகாக்கவும் இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் அந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் விரிவான பதிலைத் தரமுடியும்.

கலைவாணர் அரங்கம், சென்னை.

* வினா எண் 224— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கிலிருந்த பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோரது படங்கள் அகற்றப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெருக்கடி நிலை காலத்தில் அப்படி ஒரு செய்தி வெளியானது. இருந்தாலும் நீக்கப்படவில்லை என்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கலைவாணர் அரங்கில் அவருடைய சிறப்புகளை விளக்கும் வகையில், அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சில சம்பவங்களை படங்களாக வரைந்து அங்கே வைக்கப்படுமா ? கலைவாணர் அரங்கை மேலும் மேம்படுத்த அவருடைய பெயரால் அங்கே ஒரு நூலகம் ஏற்படுத்தவும் கலை அரங்கத்தில் அவருடைய பெயரால் நாடகங்கள் நடத்தவும் நமது அரசு திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கலைவாணர் படம் இருக்கிறதா ? அகற்றப்பட்டுவிட்டதா என்பது கேள்வி. இதற்கு இல்லை என்று பதில் அளிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு விவரங்களை அரசுக்கு எடுத்து வைக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்ல வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, கலைவாணர் அரங்கில் திரைப்படம் போடுவதை ஒரு நபருக்கு தொடர்ந்து குத்தகை விடுவதாகவும், வேறு யாராவது குத்தகை எடுக்க வேண்டுமென்றால் அவரோடு தொடர்பு கொண்டுதான் குத்தகை எடுக்க முடியும் என்ற நிலை இருப்பதாச் சொல்லப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா ? ஏன் இந்த பாகுபாடு ? அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?